# முதல் இடைப் பருவத் தேர்வு - 2022

**8** - ஆம் வகுப்பு **சமூக அறிவியல்** பதிவு எண். 1 8 2 /

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10 X 1 = 10

1. இந்தியாவில் போர்ச்சுகீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார்?
   அ) வாஸ்கோடகாமா ஆ) பார்த்தலோமியோ டயஸ்
   இ) அல்போன்சோ-டி-அல்புகர்க் ஈ) அல்மெய்டா
2. தமிழ்நாடு கடற்கரையோரத்தில் உள்ள தரங்கம்பாடி ............. வர்த்தக மையமாக இருந்தது.
   அ) போர்ச்சுக்கீசியர்கள் ஆ) ஆங்கிலேயர்கள்
   இ) பிரெஞ்சுக்காரர்கள் ஈ) டேனியர்கள்
3. மங்களூர் உடன்படிக்கை இவர்களுக்கு இடையே கையெழுத்தானது
   அ) பிரெஞ்சுக்காரர்கள் மற்றும் திப்புசுல்தான்
   ஆ) ஹைதர் அலி மற்றும் கள்ளிக்கோட்டை மன்னர் சாமரின்
   இ) ஆங்கிலேயர் மற்றும் திப்பு சுல்தான்
   ஈ) திப்பு சுல்தான் மற்றும் மராத்தியர்கள்
4. மராத்திய பேரரசின் கடைசி பீஷ்வா ................ .
   அ) பாலாஜி விஸ்வநாத் ஆ) இரண்டாம் பாஜிராவ்
   இ) பாலாஜி பாஜிராவ் ஈ) பாஜிராவ்
5. கீழ்கண்டவற்றுள் எது பாறைக்கோளம் என அழைக்கப்படுகிறது?
   அ) வளிமண்டலம் ஆ) உயிர்கோளம் இ) நிலக்கோளம் ஈ) நீர்கோளம்
6. பருத்தி வளர ஏற்ற மண் .............. .
   அ) செம்மண் ஆ) கரிசல்மண் இ) வண்டல் மண் ஈ) மலைமண்
7. புவியின் வளிமண்டலம் ................ நைட்ரஜன் மற்றும் ............... ஆக்சிஜன் அளவை கொண்டுள்ளது.
   அ) 78% மற்றும் 21% ஆ) 22% மற்றும் 1%
   இ) 21% மற்றும் 0.97 % ஈ) 10 % மற்றும் 20%
8. புவியின் உள்ள நன்னீரின் சதவிகிதம்............... .
   அ) 71% ஆ) 97% இ) 2.8% ஈ) 0.6%
9. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.
   சுயசரிதை எழுதப்பட்ட ஆதாரங்களுள் ஒன்று ஆகும்.
10. உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது .............. .
   அ) 62 ஆ) 64 இ) 65 ஈ) 58

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5 X 1 = 5

1. இந்தியாவின் தேசிய ஆவணக் காப்பகம் (NAI) ................. ல் அமைந்துள்ளது.
2. இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்துவதற்காக வாரிசு இழப்புக் கொள்கையை கொண்டு வந்தவர் .................... .
3. புவியின் 'தோல்' என்று ..................... அழைக்கப்படுகிறது.

4. ............... என்பது குறுகிய காலத்தில் வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கூறுவது ஆகும்.

5. ஆளுநரின் பதவிக் காலம் .............. ஆண்டுகள் ஆகும்.

**III பொருத்துக.** 5 X 1 = 5

| | | | |
|---|---|---|---|
| 1. | அய்-லா-சப்பேல் உடன்படிக்கை | - | கீழவை 5 |
| 2. | ஆங்கிலேயர்கள் | - | மதராஸ் 3 |
| 3. | இரயத்துவாரி | - | முதல் கர்நாடகப் போர் 1. |
| 4. | ஈரநிலைமானி | - | 1600 2 |
| 5. | சட்டமன்ற பேரவை | - | ஈரப்பதம் 4 |

**IV பின்வரும் வினாக்களுக்கு எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி.** 7 X 2 = 14

1. ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறு குறிப்பு தருக.
2. இந்தியாவில் இருந்து ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.
3. இருட்டறை துயரச் சம்பவம் பற்றி குறிப்பு வரைக.
4. துணைப்படைத் திட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக.
5. பர்தோலி சத்தியாகிரகத்தில் வல்லபாய் பட்டேலின் பங்கு பற்றி எழுதுக.
6. மண்ணின் வகைகளைக் கூறு.
7. "வெயிற் காய்வு" என்றால் என்ன?
8. காரணம் கூறுக.

   1) மலை ஏறுபவர்கள் உயர்ந்த சிகரங்களுக்குச் செல்லும் போது ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் எடுத்துச் செல்கின்றனர்.

   2) புவியியல் நன்னீர் குறைவாக உள்ளது.
9. வேறுபடுத்துக.

   1) உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப் பாறைகள். **(அல்லது)**

   காலநிலை மற்றும் வானிலை
10. மாநில சட்டமன்றத்தின் இரு அளவைகளின் பெயர்களை எழுதுக.
11. முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?
12. குடியுரிமையின் வகைகளை குறிப்பிடுக.

**V எவையேனும் இரண்டிற்கு விரிவான விடையளி.** 2 X 5 = 10

1. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.
2. பிரிட்டிஷ் ஆட்சியை விரிவுபடுத்த டல்ஹௌசிபிரபு கொண்டு வந்த கொள்கையை பற்றி விவரி.
3. பாறைகளை வகைப்படுத்தி விவரிக்கவும்.
4. நீர் சுழற்சியின் பல்வேறு படிநிலைகளைப் படத்துடன் விவரி.
5. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

6 X 1 = 6

**VI வரைபடம்.**

*இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட ஐரோப்பிய வர்த்தக மையங்களை குறிக்க.*

1) கள்ளிக்கோட்டை 2) மெட்ராஸ் 3) பழவேற்காடு

4) கொச்சின் 5) கல்கத்தா 6) பாண்டிச்சேரி